admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

மலர்:03 | இதழ்:276 | 4 பக்கங்கள் | 03:05:2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தாரூ,1825

தின கனி காலை நாளிதழ்

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-2272060 9443699066

கனி பிரிண்டிங்


DTP

நாளிதழ் வார இதழ் மாத இதழ்

[illegible]

நாளிதழ் மற்றும் [illegible]

தொடர்புக்கு : 94436 99066



நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

**விளக்கம்:**

உண்மையிலேயே மனதாரப் பற்றுகளைத் துறக்காமல்துறந்தவரைப் போல்வாழ்கின்ற வஞ்சகர்களைவிட இரக்கமற்றவர் யாருமில்லை.

## வாக்கு எண்ணிக்கை தொடர்பான திரிணமூல் காங். வழக்கை தள்ளுபடி செய்தது உச்ச நீதிமன்றம்



புதுடெல்லி:மே,03

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணியில் மத்திய அரசு பணியாளர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பணியாளர்களும் ஈடுபடுத்தப்படுவார்கள் என்ற தேர்தல் ஆணையத்தின் சுற்றறிக்கைக்கு எதிராக திரிணமூல்காங்கிரஸ்கட்சி தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.மேற்கு வங்கம் உட்பட 5 மாநிலங்களில் நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 4-ம் தேதி எண்ணப்பட உள்ளன.மேற்கு வங்கத்தில் தேர்தல் எண்ணும் பணியில் மாநில அரசு பணியாளர்களோடு, மத்திய அரசுப் பணியாளர்களும், பொதுத்துறை நிறுவனங்களின் பணியாளர்களும் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தேர்தல் ஆணையம் கடந்த ஏப்ரல் 13-ம் தேதி சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டது.இந்த சுற்றறிக்கைக்கு எதிராக திரிணமூல் காங்கிரஸ் கட்சி கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த மனுவை, உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை அடுத்து, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது.இந்த மனு நீதிபதிகள் பி.எஸ்.நரசிம்மா, ஜாய்மால்யா பஷி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. திரிணமூல் காங்கிரஸ் மற்றும் தேர்தல் ஆணையத்தின் வாதங்களைக் கேட்ட நீதிபதிகள், "வாக்கு எண்ணும் பணியாளர்களைத் தேர்வு செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உண்டு. தேர்தல் ஆணையம் வெளியிட்ட சுற்றறிக்கையை தவறு என்று கூற இயலாது.மத்திய, மாநில அரசு ஊழியர்களின் கலவையை உள்ளடக்கியதாகவே அந்த சுற்றறிக்கை தெளிவாக உள்ளது.ஏதேனும் முறைகேடுகள் நடக்கக் கூடும் என்று திரிணமூல் காங்கிரஸ் கொண்டிருக்கும் அச்சம் தேவையற்றது. அந்த சுற்றறிக்கை அதன் முழுமையான நோக்கத்துடனும் உணர்வுடனும் செயல்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் உறுதியளித்துள்ளது. எனவே, திரிணமூல் காங்கிரஸ் தொடர்ந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என உத்தரவிட்டனர்.

## 'மனிதாபிமானம் மிக்கதாக வங்கி நிர்வாகத்தை மாற்றுங்கள்' நிதியமைச்சருக்கு நவீன் பட்நாயக் கடிதம்





புதுடெல்லி:மே,03

சகோதரியின் எலும்புக் கூடுடன் வந்ததை அடுத்து வங்கி நிர்வாகம் பணம் வழங்கிய நிலையில், மனிதாபிமானத்துடன் கூடியதாக வங்கி நிர்வாகத்தை மாற்றுமாறு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு ஒடிசா எதிர்க்கட்சித் தலைவர் நவீன் பட்நாயக் கடிதம் எழுதியுள்ளார்.இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில், "ஜீத்து முண்டா என்ற பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர் தனக்கு சேர வேண்டிய பணத்தைப் பெறுவதற்காக தனது சகோதரியின் மரணத்துக்கான ஆதாரமாக அவரது எலும்புக்கூட்டைத் தோண்டி எடுத்து வங்கிக்கு எடுத்துச் செல்லும்படிச் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார். வங்கிக்கு அவர் பலமுறை சென்றும், அதிகாரிகளிடம் இருந்து எந்த உதவியோ அல்லது தெளிவோ கிடைக்காத நிலையில் இந்த சம்பவம் நடந்துள்ளது.இதைவிட அதிர்ச்சியளிப்பது என்னவென்றால், ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதாகக் கூறி இந்த மனிதாபிமானமற்ற நடத்தையை வங்கி நியாயப்படுத்த முயன்றதுதான். வங்கி அதிகாரிகள் நடைமுறைகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு, தாங்கள் சேவை செய்ய வேண்டிய மக்களையே கைவிடும் போக்கையே இது காட்டுகிறது.ஜனநாயகத்தில் விதிகள் குடிமக்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காகவே தவிர, அவர்களை அவமானப்படுத்துவதற்காக அல்ல என்பதை நான் மீண்டும் வலியுறுத்தத் தேவையில்லை. இந்த கொடுமையான சம்பவம் ஒடிசா முழுவதும் மக்களின் உணர்வுகளை கொந்தளிப்படையச் செய்துள்ளது. அதோடு, இந்த சம்பவம் நியூயார்க் போஸ்ட் உள்ளிட்ட சர்வதேச ஊடகங்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.இந்தச் சம்பவம் தனிப்பட்டதாக இருந்தாலும், வங்கி நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு புரிதலை இது நமக்கு அளிக்கிறது. முதலில், இந்த அதிர்ச்சியூட்டும் சம்பவத்துக்கு தெளிவான பொறுப்புக்கூறல் நிர்ணயிக்கப்படுவதை உடனடியாக உறுதி செய்யுமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.இது, மனிதாபிமானம், பரிவு, இரக்கத்துடன் குடிமக்களை மையமாகக் கொண்ட சேவையை வழங்குவதை உறுதி செய்ய ஒரு தெளிவான சமிக்ஞையை அனுப்பும். உங்களின் இரக்கமுள்ள தலையீட்டால், குடிமக்களிடம் இதுபோன்ற மனிதாபிமானமற்ற நடத்தை நாட்டின் வேறு எந்த பகுதியிலும் மீண்டும் நிகழாது என்று நான் உறுதியாக நம்புகிறேன்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.பின்னணி: ஒடிசா மாநிலம் கேந்துஜார் மாவட்டம் தியானாலி கிராமத்தைச் சேர்ந்தவர் ஜீத்து முண்டா. இவரது சகோதரி கக்ரா முண்டா இரண்டு மாதங்களுக்கு முன்பு காலமானார். மல்லிபாசி பகுதியில் உள்ள ஒடிசா கிராமின் வங்கியின் கிளையில் கக்ரா கணக்கு வைத்திருந்தார். அதில் இருந்த ரூ.19,400-ஐ எடுப்பதற்காக ஜீத்து முண்டா வங்கிக்குச் சென்றுள்ளார்.கல்வியறிவு இல்லாத பழங்குடியினரான ஜீத்து முண்டாவிடம், அவரது சகோதரியின் இறப்புச் சான்றிதழ் அல்லது வாரிசுச் சான்றிதழ் இல்லை. இதனால், கணக்கு வைத்திருப்பவர் நேரில் வர வேண்டும் அல்லது உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று வங்கி மேலாளர் கூறியுள்ளார்.

# தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 5 மாநிலங்களில் நாளை வாக்கு எண்ணிக்கை

சென்னை: மே,03

தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளை நடைபெறுகிறது. தமிழகத்தில் பாதுகாப்புக்கு 1 லட்சம் போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். தமிழகம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 15-ம் தேதி வெளியிட்டது. அதன்படி, புதுச்சேரி, கேரளா, அசாமில் கடந்த ஏப்.9-ம் தேதியும், தமிழகத்தில் கடந்த ஏப்.23-ம் தேதியும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடந்தது. மேற்கு வங்கத்தில் ஏப்.23, 29 ஆகிய தேதிகளில் 2 கட்டமாக நடைபெற்றது. அங்கு 2-ம் கட்ட தேர்தலில் முறைகேடு புகார்கள் எழுந்ததால், 15 வாக்குச்சாவடிகளில் நேற்று மறு வாக்குப்பதிவு நடத்தப்பட்டது.இதேபோல, கோவா, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய 6 மாநிலங்களில் காலியாக உள்ள பேரவைத் தொகுதிகளுக்கு ஏப்.9, 23 ஆகிய தேதிகளில் இடைத் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. தமிழகத்தைப் பொருத்தவரை, மொத்தம் 4,023 வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ளனர். 5.73 கோடி வாக்காளர்களில் 4.88 கோடி பேர் வாக்களித்தனர். இதன்மூலம் 85.10



சதவீத வாக்குப்பதிவு நடந்து, சாதனை படைக்கப்பட்டுள்ளது.கடந்த 23-ம் தேதி மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடிந்ததும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் சீலிடப்பட்டு, தமிழகம் முழுவதும் வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ள 62 மையங்களில் பாதுகாப்பு அறைகளில் ('ஸ்டிராங் ரூம்') வைக்கப்பட்டுள்ளன. இங்கு 4 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.இந்நிலையில், 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் இடைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளை காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக 5 மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் நேற்று இணைய வழியில் ஆலோசனை நடத்தினார். தமிழகத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் விளக்கினார். "தமிழகத்தில் 62 மையங்களில் 65 கம்பெனி துணை ராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். 18 ஆயிரம் போலீஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மாநிலம் முழுவதும் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க சுமார் 1 லட்சம் போலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொகுதிக்கு ஒரு வாக்கு எண்ணிக்கை பார்வையாளர் என 234 பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்" என்று அவர் தெரிவித்தார். முழு அமைதி, பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தமிழகம் முழுவதும் நாளை மதுக்கடைகளை மூடவும் அவர் உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் 62 மையங்களில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், குடிநீர், கழிவறை, ஒளி, ஒலி வசதிகள், மின் இணைப்பு தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நேற்று ஆய்வு செய்தனர். மேற்கு வங்கத்தில் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பாக, அமைதியாக, வெளிப்படையான சூழலில் நடைபெறுவதை உறுதி செய்ய 165 கூடுதல் வாக்கு எண்ணிக்கை பார்வையாளர்கள், 77 காவல் பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது. தமிழகத்துக்கு அவ்வாறு நியமிக்கப்படவில்லை என தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

# "200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றி பெறும்" - செல்வப்பெருந்தகை உறுதி



கோவை: மே,03

200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றி பெறும் என கோவையில் செல்வப்பெருந்தகை உறுதிபட தெரிவித்தார்.காங்கிரஸ் மாநில தலைவர் செல்வப்பெருந்தகை இன்று (மே 2) சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தார். கோவை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: சமீபத்தில் வெளியான தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் கருத்துக் கணிப்பு என்பது கருத்துக் கணிப்பு அல்ல கருத்து திணிப்பு. மக்கள் முடிவு செய்து விட்டனர்.மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டனி 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறும். திமுக 200 இடங்களில் வெற்றி பெறும் என நாங்கள் ஆரம்பத்தில் இருந்தே சொல்லி வருகிறோம் என்பதால் அதைவிட குறைந்த எண்ணிக்கையை வெளியிட்டுள்ளதால் கருத்து திணிப்பு என்று சொல்லி வருகிறோம். தவெக குறித்து தேர்தல் முடிவுகள் வெளிவரும் நாளில் பேசுவோம்.திமுக ஆட்சியில் கடந்த 5 ஆண்டுகள் சிறப்பான பணி செய்யப்பட்டுள்ளது. காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் பிரச்சாரம் செய்துள்ளனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் அனைத்து தொகுதிகளிலும் பிரச்சாரம் செய்துள்ளதன் பயனாக அந்த பணி வீண் போகாது.யார்? ஆள வேண்டும். யார்? ஆளக்கூடாது என்று மக்கள் அறிந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தேர்தல் முடியும் போதும் சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை மத்தியில் ஆட்சியில் உள்ளவர்கள் ஏற்றி விடுவார்கள். நான் காங்கிரஸ் தலைவராக இல்லாதபோது கூட்டனியில் 25 தொகுதிகள் முதலில் வாங்கினார்கள். ஆனால், தற்போது 28 தொகுதிகள் மற்றும் ஒரு எம்.பி சீட் கூடுதலாக வாங்கி உள்ளோம். இது அழிவு பாதையா? நான் கட்சியில் தலைமை பொறுப்புக்கு வருவதற்கு முன்பு 100 சதவீதம் ஸ்ட்ரைக் ரேட் நாடாளுமன்றத்தில் இல்லை. இப்போது புதுச்சேரி உட்பட 10-க்கு 10 என 100 சதவீதம் மக்களவையில் உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.பின்னர் அவரிடம் தமிழக காங்கிரஸ் தலைமை குறித்து ஜோதிமணி எம்.பி. தெரிவித்த கருத்து தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த செல்வப்பெருந்தகை, "ஒரு சிலர் மனக்குமுரலோடு, நேர்மை இல்லாமல் போற போக்கில் பேசுவதற்கு நான் பதில் சொல்வதில்லை. ராகுல் காந்தி பிரச்சாரக் கூட்டத்தில் எனக்கு தெரிந்த ஆங்கிலத்தில் பேசினேன். எனக்கு காதில் சரியாக விழவில்லை. மேலும், நான் அரசு பள்ளியில் படித்தவன். இந்த அளவுக்கு பேசியதற்காக அதனை பாராட்ட வேண்டும். நான் என்ன கான்வென்டில் படித்தேனா? சிபிஎஸ்இ பள்ளியில் படித்தேனா?. அரசுப் பள்ளியில் படித்த என்னை விமர்சனம் செய்வது என்றால் அவர்கள் மன நோயாளி என்று தான் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

## புறம்போக்கு நிலத்தில் உள்ள கட்டுமானங்களை இடிக்கக் கோரிய வழக்கு: அரசு பதிலளிக்க நீதிமன்றம் உத்தரவு



சென்னை: மே,03

திருநீர்மலையில் புறம்போக்கு நிலத்தில் குட்டையை நிரப்பி கட்டப்பட்டுள்ள வணிக வளாகங்களை இடிக்கக் கோரிய வழக்கில், தமிழக அரசு பதிலளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. சென்னை திருநீர்மலையை அடுத்த திருமங்கையாழ்வார்புரத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒ.உதயக்குமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "திருநீர்மலையில் அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்ட நிலத்தில் பல ஆண்டுகளாக குவாரி குட்டை உள்ளது.தற்போது தாம்பரம் மாநகராட்சி நிர்வாகம், குட்டையை மண், கட்டிட இடிபாடுகளைக் கொண்டு நிரப்பி 5 வணிக வளாகங்களையும், பொது கழிப்பறைகளையும் கட்டியுள்ளது. மழைக்காலங்களில் இப்பகுதியில் தண்ணீர் தேங்காதபடி மழைநீர் இந்த குட்டைக்குத்தான் செல்லும்.தற்போது குட்டையை மூடி விட்டதால் அப்பகுதியில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது. அத்துடன் குடியிருப்புகளின் அருகே கட்டப்பட்டுள்ள பொது கழிப்பறைகளால் அப்பகுதியில் சுற்றுச்சூழலும் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.எனவே குட்டையை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள வணிக வளாகங்கள் மற்றும் பொது கழிப்பறைகளை இடித்து அகற்றிவிட்டு, அந்த இடத்தை பழைய நிலைக்கு மீட்டுருவாக்கம் செய்ய தாம்பரம் மாநகராட்சிக்கும், தமிழக அரசுக்கும் உத்தரவிட வேண்டும்" எனக் கோரியிருந்தார்.இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் எஸ்.எம். சுப்ரமணியம், கே.சுரேந்தர் ஆகியோர் அடங்கிய அமர்வு, இதுதொடர்பாக தமிழக வருவாய் துறை, தாம்பரம் மாநகராட்சி, செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம் உள்ளிட்டோர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஜூன் மாதத்துக்கு தள்ளி வைத்துள்ளனர்.

## திருச்சி அருகே தவெக தேர்தல் பணிமனைக்கு தீவைப்பு



திருச்சி:மே,03

திருச்சி அருகே பேட்டைவாய்த்தலையில் தவெக தேர்தல் பணிமனையை பெட்ரோல் ஊற்றி தீ வைத்த நபர்களை போலீஸார் தேடி வருகின்றனர். திருச்சி மாவட்டம் பேட்டைவாய்த்தலையை சேர்ந்தவர் வீர சிவா. தவெக விவசாய அணி மாவட்ட செயலாளராக உள்ளார். சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி ஸ்ரீரங்கம் தொகுதி தவெக வேட்பாளருக்காக வீட்டின் முன்பு தேர்தல் பணிமனை அமைத்திருந்தார். இந்நிலையில் நேற்று அதிகாலை இந்த தேர்தல் பணிமனை தீ வைத்து எரிக்கப்பட்டிருந்ததுடன், அங்கு வைக்கப்பட்டிருந்த தவெக விளம்பர பதாகைகளும் கிழிக்கப்பட்டிருந்தன. இதுகுறித்து வீர சிவா கொடுத்த புகாரின்பேரில் பேட்டைவாய்த்தலை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர். மேலும், அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த 2 பேர், தாங்கள் கொண்டு வந்த பாட்டிலில் இருந்த பெட்ரோலை ஊற்றி தேர்தல் பணிமனைக்கு தீ வைத்ததுடன், அங்கிருந்த தவெக பதாகைகளையும் கிழித்தெறிந்துவிட்டு அங்கிருந்து தப்பிச் செல்வது தெரியவந்தது. அதனடிப்படையில் இருவரையும் போலீஸார் தேடி வருகின்றனர். இதைத் தொடர்ந்து ஸ்ரீரங்கம் தொகுதி தவெக வேட்பாளர் ரமேஷ், தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளது: பேட்டைவாய்த்தலை பகுதியில் செயல்பட்டு வந்த எனது தேர்தல் அலுவலகம் மர்ம நபர்களால் தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது.மேலும், வாக்கு எண்ணும் மையத்தில் எனக்கும், கட்சி நிர்வாகிகளுக்கும் எதிராக வன்முறை செயல்களை அரங்கேற்ற எதிர்க்கட்சிகள் திட்டமிடுவதாக தகவல்கள் கிடைத்துள்ளது. இந்த பிரச்சினையில் தேர்தல் ஆணையம் தலையிட்டு, வாக்கு எண்ணும் மையத்தில் கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

## ராஜஸ்தானில் சென்னை போலீஸார் மீது வழக்குப் பதிவு: விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய தமிழக டிஜிபி உத்தரவு

யானைக்கவுனி நகை திருட்டு வழக்கு தொடர்பாக விசாரணை நடத்தப்பட்ட ராஜஸ்தான் நகைக் கடை உரிமையாளர் தற்கொலை செய்துகொண்டார். இது தொடர்பாக, சென்னை போலீஸார் மீது ராஜஸ்தான் காவல்துறை தற்கொலைக்கு தூண்டியதாக வழக்குப் பதிவு செய்துள்ளது சம்பவம் குறித்து, விரிவான விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு, சென்னை காவல் ஆணையருக்கு, தமிழக டிஜிபி உத்தரவிட்டுள்ளார். சென்னை, யானைக்கவுனி என்எஸ்சி போஸ் சாலையில் உள்ள ஒரு நகைக்கடையில் கடந்த மாதம் 2 கிலோ தங்க நகை கொள்ளையடிக்கப்பட்டது. இதுதொடர்பாக யானைக்கவுனி குற்றப்பிரிவு போலீஸார் நடத்திய விசாரணையில், கடையில் வேலை பார்த்த ராஜஸ்தானைச் சேர்ந்த சக்தி சிங் (26) மற்றும் அவரது கூட்டாளி லட்சுமணன் சிங் (27) ஆகியோர் திருடியது சிசிடிவி மூலம் உறுதியானது. தனிப்படை போலீஸார் ராஜஸ்தான் மாநிலம் பாலி மாவட்டத்துக்கு விரைந்து சென்று லட்சுமணன் சிங்கை கைது செய்தனர். அவரிடமிருந்து 60 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. லட்சுமணன்சிங்கின்செல்போனை ஆய்வு செய்த போது, அவர் ராஜஸ்தானில் 'கே.கே. ஜுவல்லர்ஸ்' என்ற கடையை நடத்தி வரும் வர்தா ராம் குர்ஜர் என்பவருக்குப் பலமுறை ஆன்லைன் மூலம் பணம் அனுப்பியது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், வர்தா ராம் ஏற்கெனவே சென்னையில் 750 கிராம் தங்கக் காசுகள் திருடிய வழக்கில் கைதாகி ஜாமீனில் வெளி வந்தவர் என்பதும் தெரிய வந்தது.இதையடுத்து, மீண்டும் விசாரணைக்காக ராஜஸ்தான் சென்ற சென்னை தனிப்படை காவலர்கள் பாக்ரி காவல் நிலையத்தில் வர்தா ராமிடம் விசாரணை நடத்தினர். அதில் போலீஸாருடன் வந்த தொழிலதிபர் மகாவீர் மேத்தா மற்றும் அவரது ஆட்கள் வர்தா ராமைத் தொடர்பு கொண்டு மிரட்டியதாகக் கூறப்படுகிறது. ஒரு கிலோ தங்கம் தரவில்லை என்றால், உன்னைக் கொலை செய்து பொய் வழக்கில் உள்ளே தள்ளுவோம் என்று மிரட்டியதாகத் தெரிகிறது.இதனால், மனமுடைந்த வர்தா ராம், தனது சகோதரருக்கு ஒரு வாட்ஸ்- அப் ஆடியோவை அனுப்பிவிட்டு விஷம் அருந்தினார்.

# கன்னியாகுமரி ஸ்ரீ குபேர லிங்கேஸ்வரா ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு



**கன்னியாகுமரி, மே. 03**

கன்னியாகுமரி மாவட்டம் இறச்சகுளம் அடுத்த ஈசாந்திமங்கலம் பகுதியில் உள்ள ஸ்ரீ குபேரபுரியில் 01.05.2026 அன்று சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு ஸ்ரீ குபேரலிங்கேஸ்வரா சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் அபிஷேகம் நடைபெற்றது. மேலும் ஆசிரியை பொன்னம்மாள் மற்றும் ரமணி குழுவினரின் திருவாசக முற்றோதல் நிகழ்வும் நடைபெற்றது. மேலும் வீர வாஞ்சி விஜய் அவர்களின் களரி நிகழ்வும், இந்து முன்னணி மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ஆறுமுகம் தலைமையில் திரு கயிலை வாத்திய நிகழ்வும் நடைபெற்றது. மேலும் நிகழ்ச்சியில் இந்து மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் சு.பா முத்து பாரதிய ஜனதா கட்சி மாவட்ட தலைவர் கோபகுமார், பாரதிய ஜனதா கட்சி ஒன்றிய தலைவர் வழக்கறிஞர் பத்மகுமார், புதிய உலகம் புலவர் கு. ரவீந்திரன், தெய்வநாயகப் பெருமாள், இந்திய பாரம்பரிய கலை இலக்கிய பேரவை தலைவர் சிவனி சதீஷ், விஷ்வ ஹிந்து பரிஷத் , இறச்சகுளம் காளியப்பன், நாஞ்சில் ராஜா, கார்த்திக் சுப்பிரமணியன், யோகிராம், சுரத்குமார், மடாலயம் ராஜ யோகினி தங்க லட்சுமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் குபேரபுரியில் விளைந்த அரிசி மற்றும் காய்கறிகளால் சமைக்கப்பட்டு இரவு நிலா சோறு விருந்தும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் வருகை புரிந்த பக்த பெருமக்கள் அனைவருக்கும் புதிய உலக அமைப்பின் நிறுவனத் தலைவர் டாக்டர் சதீஷ் கிருஷ்ணா நன்றி தெரிவித்தார்.

# கோவையில் பழங்குடியின பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கல்



கோவை, மே. 03

கோவை வின்னர்ஸ் இந்தியா குழுமங்களின் சார்பில், 50க்கும் மேற்பட்ட பழங்குடியின பள்ளி மாணவர்களுக்கு ஸ்கூல் பேக்குகள், நோட்டுகள், எழுது பொருட்கள் வழங்கப்பட்டது.

இதுகுறித்து கோவை எட்டிமடையில் உள்ள ஆர்.கிருஷ்ணசாமி கவுண்டர் நினைவு அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலரும், எட்டிமடை எல்லை மாகாளியம்மன் கோவில் நிர்வாக அலங்காவலரும், வின்னர்ஸ் இந்தியா குழுமங்களின் நிர்வாக இயக்குனருமான கண்ணன் நிருபர்களிடம் கூறியதாவது:

ரியல் எஸ்டேட் துறையில் முன்னணி நிறுவனமாக விளங்கும் வின்னர்ஸ் இந்தியா குழுமங்கள் சார்பிலும், எங்கள் தந்தையின் நினைவு அறக்கட்டளை சார்பிலும் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சமுதாய பணிகளில் ஈடுபட்டு வருகிறோம். எங்களது பிரதான தொழில் ரியல் எஸ்டேட் என்பதால் அது சம்பந்தமான ஏராளமான நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்.

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் கோவை மாவட்ட அளவில் முதலிடம் பிடிக்கும் மாணவர்களுக்கு வீட்டுமனைகளை பரிசாக தந்துள்ளோம்.

இது தவிர சிறப்பாக செயல்படும் கோவை மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள், இருதயம் மற்றும் சிறுநீரக நோய்களால் கடுமையாக பாதிக்கப்பட்டு மீண்டு வந்த மாணவ மாணவிகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு அவர்கள் பெயரில் வீட்டு மனைகளை இலவசமாக கிரயம் செய்து தந்துள்ளோம். அனைத்து வசதிகளையும் கொண்ட எங்கள் லேஅவுட்டுகளில் நாங்கள் இலவசமாக கொடுத்த வீட்டு மனைகளில் ஏராளமானோர் வீடு கட்டி மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார்கள்.

இதுதவிர சின்னா ம்பதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு ஐந்து சென்ட் இடம் தானமாக கொடுத்து உள்ளோம். தற்போது அந்த இடத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டு கடந்த மாதம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு வந்து உள்ளது. சின்னாம்பதியில் உள்ள அரசு பழங்குடியின உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியைதத்து எடுத்து அங்கு படிக்கும் மாணவர்களுக்கு தேவையான புத்தக பைகள், நோட்டு புத்தகங்கள், பேனா, பென்சில் உள்ளிட்டவற்றை வழங்கி வருகிறோம். விழாவில் 50 க்கும் மேற்பட்ட பழங்குடியின பள்ளி மாணவர்களுக்கு ஸ்கூல் பேக்குகள், நோட்டுகள், எழுது பொருட்கள் வழங்கி உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.



சேலம் மாவட்டம், சங்ககிரி விவேகானந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைந்துள்ள சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ் ஆய்வு மேற்கொண்டார். உடன் சங்ககிரி வாக்கு எண்ணிக்கை பார்வையாளர் சங்கர் ராமசந்திர பார்ஹே உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



2026 சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக தேர்தல் கணினி மையத்தில் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட குலுக்கல் முறை தேர்வு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் சட்டமன்ற தொகுதி தேர்தல் வாக்கு எண்ணிக்கை பார்வையாளர்கள் திவேஷ் செஹரா, கேஷ்வேந்திர குமார், சந்திரசேகர் சுக்லா, பீமல் ராய் SCS, பினய குமார் டாஷ் SCS, சுனில் பாட்டி SCS ஆகியோர் முன்னிலையில் இன்று (02.05.2026) நடைபெற்றது.

# புளியங்குடி முப்பெரும் தேவியர் பவானி அம்மன் ஆலயத்தில் சித்ரா பௌர்ணமி சிறப்பு பூஜை




புளியங்குடி, மே. 3

புளியங்குடிஅரசு மருத்துவமனை அருகில் உள்ள முப்பெரும் தேவியர் பவானி அம்மன் ஆலயத்தில் அருள் பாலித்து வரும் பெரிய பாளையத்து பவானி அம்மன், நாகக்கன்னி அம்மன் நாகாத்தம்மன் ஆகிய தெய்வங்களுக்கு மாதந்தோறும் நடைபெறும் சித்ரா பௌர்ணமி பூஜை சிறப்பாக நடைபெற்றது.

பௌர்ணமி பூஜை முன்னிட்டு அதிகாலை 4 மணியளவில் நடை திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.காலை9மணிஅளவில்சித்ராபௌர்ணமி குறித்து குருநாதர் சக்தியம்மா ஆன்மீகசொற்பொழிவு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து பௌர்ணமி சிறப்பு அருள் வாக்கு நடைபெற்றது. மாலை 6 மணி அளவில் முப்பெரும் தேவியர் பவானி அம்மனுக்கு தேன், சந்தனம், குங்குமம், தயிர் உள்பட 21 வகையான நறுமணப்பொருட்களாலும்,உலகமக்கள்நன்மைக்காகவும் மழை வேண்டியும் 1008 லிட்டர் பால் அபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து கோவில் வளாகத்தில் உள்ள பரிவார தெய்வங்களான பால விநாயகர், கல்யாண சுப்பிரமணியர், வள்ளி தெய்வானை, 18 படி கருப்பசாமி, பவானி பத்திரகாளியம்மன், செங்காளியம்மன் ஆகிய தெய்வங்களுக்கு அபிஷேகங்கள் நடைபெற்றது. தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டுபெரியதீபாராதனைகாண்பிக்கப்பட்டது. இரவு 8 மணி அளவில் கோவில் வளாகத்தில் 108 திருவிளக்கு பூஜை நடைபெற்றது.இதில் பெண்கள் கலந்து கொண்டு பக்தி பாடல்கள் பாடி திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.விழா ஏற்பாடுகளை கோவில் குருநாதர் சக்தியம்மா மற்றும் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.



# ராமநாதபுரத்தில் ஏ.ஐ.டி.யு.சி மற்றும் சி.ஐ.டி.யு சார்பில் மே தின பேரணி

பரமக்குடி, மே. 03

ராமநாதபுரத்தில் நடைபெற்ற மே தின விழா பேரணி பொதுக்கூட்டம் எஸ்.பி. ராதா, ஏ ஐ டி யு சி மாவட்ட தலைவர் அய்யாதுரை, சி ஐ டி யு மாவட்ட துணை தலைவர், சிறப்புரை ஏ ஐ டி யு சி ஜி மாநில குழு உறுப்பினர் மஞ்சுளா, கந்தர்வக்கோட்டை சின்னதுரை எம் எல் ஏ, சி ஐ டி யு, என்.கே.ராஜன், மாவட்ட பொது செயலாளர் ஏ.ஐ.டி.யு.சி. சந்தானம், சி ஐ டி யு மாவட்ட செயலாளர் மற்றும் தோழர்கள் சிபிஐ மாவட்ட செயலாளர் என் எஸ் பெருமாள், சிபிஎம் மாவட்ட செயலாளர் ஆர் குருவேல், ஏ ஐ டி யு சி மாவட்ட பொறுப்பாளர்கள்சி ஆர்செந்தில்வேல்,ஜிலோகநாதன், கே ஆர் சுப்பிரமணியம், ரமேஷ், பாபு, எஸ் சுப்பிரமணியன், பி ஆறுமுகம், எம் தினகரன், எம் செந்தில், ஜி. லோகநாதன், பி ராஜேந்திரன், பி சண்முகராஜன், டி எம் சிவக்குமார் உள்ளிட்ட மாவட்ட பொறுப்பாளர்கள் சி ஐ டி யு பாஸ்கர், எம்பி செந்தில், கலையரசன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

பேரணியில்500க்கும்மேற்பட்ட தொழிலாளர்கலந்து கொண்டனர். பொது கூட்டத்தில் தொழிலாளர்கள் விரோத 4 சட்ட திருத்தம், அரசு அலுவலகங்கள் ஐ டி நிறுவனங்களில் பணியாளர்கள் அதிக நேரம் பணி செய்வதை தடுக்கவும் கூட்டணி கட்சியில் இருந்தாலும் தொழிலாளர் விரோத நடவடிக்கைகள், பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க அரசை வலியுறுத்துவது, போராட்டங்கள் நடத்துவது உள்ளிட்ட கோரிக்கை குறித்து பேசினார்கள்.



விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் தாலுகா அரகண்டநல்லூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூட வளாகத்தில்தமிழ்நாடுஒழுங்குமுறைவிற்பனைக்கூட எடைப்பணி தொழிலாளர் சங்கம் சார்பில் தமிழ்நாடு முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட இடங்களில் 140 வது சர்வதேச தொழிலாளர் தினமான மே தின விழா நிகழ்சிகள் சங்கத்தின் சார்பில் கிளைத்தலைவர் எஸ். பழனி தலைமையில் நடைபெற்றது.விழாவில் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் ஏ.வி.சரவணன் கலந்துகொண்டு சங்ககொடியை ஏற்றிவைத்து பேசினார். மின் ஊழியர் மத்திய அமைப்பின் (சிஐடியூ) முன்னணி தலைவர் பி.விருத்தகிரி மே தின உரையாற்றினார். நிகழ்வில் சங்கத்தின் மாநில பொருளாளர் எம்.கண்னன், செயலாளர் கே. ரவிக்குமார், பொருளாளர் கே.முருகன், துணைசெயலாளர் ஆர்.செந்திகுமார் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட எடைப்பணி தொழிலாளர்கள் பங்கேற்றனர்.தொழிலாளர் தினத்தையொட்டி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.





# தூத்துக்குடி பாஞ்சாலங்குறிச்சி வீரசக்கதேவி ஆலயத்தில் கால் நாட்டு விழா

**தூத்துக்குடி, மே. 03**

தூத்துக்குடி விடுதலைப் போராட்ட மாவீரர் வீர பாண்டிய கட்டபொம்மனின் குலதெய்வமான பாஞ்சாலங்குறிச்சி வீரசக்கதேவி ஆலயத்தின் 70 வது ஆண்டு திருவிழாவை முன்னிட்டு, ஆலயத்தில் கால் நாட்டு விழா கோலாகலமாக நடைபெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் கடைசி வார இறுதியில் நடைபெறும் இந்தத் திருவிழாவிற்கான கால் நாட்டு விழா, ஆலயக் குழு தலைவர் குளத்தூர் மாஜி ஜமீன்தார் கண்ணன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் ஆதிசங்கர், பொருளாளர் வரதராஜப் பெருமாள் ஆகியோர் முன்னிலை வகிக்க, வீரசக்கதேவிக்குச் சிறப்புப் பூஜைகள் மற்றும் தீபாராதனைகள் நடத்தப்பட்டன. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

இந்த ஆண்டு 70வது ஆண்டு திருவிழா வருகிற மே 8, 9, 10 (சித்திரை 25, 26, 27) ஆகிய மூன்று தினங்களில் (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது. திருவிழா நாட்களில் தேவராட்டம், ஒயிலாட்டம், சிலம்பா ட்டம், நையாண்டி மேளம் மற்றும் இன்னிசைக் கச்சேரி பட்டிமன்றம், கருத்தரங்கம், வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகம் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் முளைப்பாரி எடுத்தல் மற்றும் பழப்பெட்டி காணிக்கை செலுத்துதல் போன்ற வழிபாடுகள் நடைபெற உள்ளன. மேலும் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து மாவீரன் ஊமைத்துரை தொண்டர் படையினர் மற்றும் கட்டபொம்மன் இளைஞரணியினர் மூலம் நினைவு ஜோதி தொடர் ஓட்டமாகக் கொண்டு வரப்படும்.

இந்த விழாவில் லட்சக்கணக்கான பொதுமக்களும் முக்கியப் பிரமுகர்களும் பங்கேற்பார்கள் என்பதால், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதன் தலைமையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



தருமபுரி மாவட்டத்தில் NEET தேர்வு வரும் மே03 (ஞாயிற்றுக்கிழமை) நேரடித் தேர்வாக (Penandpaper mode) நடைப்பெற உள்ளதால் தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் நடைப்பெற்று வரும் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் (01.05.2026) நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கவிதா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கன்னியாகுமரி மதரஸத்துர் ரஹ்மான் மக்தப் மதரஸா 16ம் ஆண்டு நிறைவு மற்றும் பரிசளிப்பு நிகழ்ச்சி



**கன்னியாகுமரி, மே. 03**

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத், கன்னியாகுமரி மாவட்டம், திருவிதாங்கோடு கிளை சார்பாக நடத்தப்பட்டு வரும் மதரஸத்துர் ரஹ்மான் சிறுவர், சிறுமிகளுக்கான மக்தப் மதரஸாவின் 16ம் ஆண்டு நிறைவு மற்றும் பரிசளிப்பு நிகழ்ச்சி 0105 2026 அன்று மாலை திருவிதாங்கோடு, துரப்பு ஜங்சன், எம்.எம். மெமோரியல் ஹாலில் வைத்து தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத், கன்னியாகுமரி மாவட்டத் செயலாளர் செய்யது அஹமது கரீம் தலைமையில் மாவட்ட, கிளை நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் TNTJ பேச்சாளர் சகோதரர். தவ்ஹீத் M.I.Sc “வளரும் தலைமுறையை வார்த்தெடுப்போம்” என்ற தலைப்பிலும், TNTJ குமரி மாவட்டப் பேச்சாளர் சகோதரி. ஃபர்ஸானா ஆலிமா “ஈமானை சிறு வயதில் விதைப்போம்” என்ற தலைப்பிலும் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து மதரஸா மாணவ, மாணவிகளின் மார்க்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியாக மதரஸா ஆண்டு தேர்வில் முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளுக்கும், இந்த 20252026 கல்வியாண்டில் அதிக நாட்கள் வருகை பதிவேடு பதிவு செய்த மாணவ, மாணவிகளுக்கும் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும் மதரஸா ஆசிரியர்கள், மற்றும் ஆசிரியைகளுக்கும் நினைவு பரிசுகள் வழங்கப் பட்டன.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கிளைத் தலைவர் நூறுல் அமீன், கிளைச் செயலாளர் ஷாஹுல் ஹமீது, கிளைப் பொருளாளர் அப்துல் ஹமீது, கிளைத் துணைத் தலைவர் ஷேக் அலி கிளை துணைச் செயலாளர் ஜாஹீர் ஹுஸைன், கிளைஅணிச் செயலாளர்கள் ஜலாலுதீன், முஹம்மது ஹாஸில், முஹம்மது யாசிர், முஸம்மில் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தார்கள். இறுதியில் கிளைச் செயலாளர் ஷாஹுல் ஹமீது நன்றியுரை நிகழ்த்தினார்.

## விருதுநகர் மாவட்டத்தில்

# வாக்கு எண்ணிக்கை முன்னேற்பாடு பணிகள் குறித்து கலெக்டர் தலைமையில் அரசியல் கட்சிகளுடனான ஆலோசனைக்கூட்டம்



விருதுநகர், மே. 03–

விருதுநகர் மாவட்டத்தில் 7 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை முன்னேற்பாடு பணிகள் தீவிரம்: மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் வேட்பாளர்கள் சார்ந்த அரசியல் கட்சிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 23.04.2026 அன்று நடைபெற்று, பதிவான வாக்குகள் அனைத்தும் 04.05.2026 அன்று விருதுநகர் ச.வெள்ளைச்சாமி நாடார் பாலிடெக்னிக் கல்லூரி (VSVNPC) மையத்தில் எண்ணப்பட உள்ளன.

இதற்கான முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடனான ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என். ஸ்ரீநாதா, முன்னிலையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அன்று (01.05.2026) நடைபெற்றது.

வாக்கு எண்ணிக்கை மையம்: விருதுநகர்மாவட்டத்தில் உள்ள 202ராஜபாளையம், 203ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி), 204சாத்தூர், 205சிவகாசி, 206விருதுநகர், 207அருப்புக்கோட்டை மற்றும் 208திருச்சுழி ஆகிய 7 சட்டமன்றத் தொகுதிகளின் வாக்கு எண்ணும் பணி விருதுநகர் ச.வெள்ளைச்சாமி நாடார் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் மற்றும் அறிவுறுத்தல்கள்: கட்டமைப்பு மற்றும் கண்காணிப்பு:

வாக்குஎண்ணும்மையத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக ஒதுக்கப்பட்ட அறைகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) வைக்கப்பட்டுள்ள 'காப்பு அறைகள்' (Strong Rooms) முதல் வாக்கு எண்ணும் மேஜைகள் வரை அனைத்தும் சிசிடிவி (CCTV) கேமராக்கள் மூலம் 24 மணி நேரமும் கண்காணிக்கப்படும். தடையற்ற மின்சாரத்தை உறுதி செய்ய தேவையான முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வளையம்: இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் படி, வாக்கு எண்ணும் மையத்தில் சுற்றி மத்திய பாதுகாப்பு படை, தமிழ்நாடு அரசின் சிறப்பு காவல் படை, ஆயுதப்படை மற்றும் சட்டம் ஒழுங்கு காவலர்கள் என 4 அடுக்குப் பாதுகாப்பு வசதிகள் ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளது.

அடையாள அட்டைகள்: வாக்கு எண்ணும் மையத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படும் முகவர்களுக்கு இந்த ஆண்டு முதன்முறையாக QR கோடுடன் கூடிய பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்த அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. உரிய அடையாள அட்டை இல்லாத எவரும் மையத்திற்குள் நுழைய அனுமதி இல்லை.

தடைசெய்யப்பட்ட பொருட்கள்: வாக்கு எண்ணும் மையத்திற்குள் செல்போன்கள், ஐபேட், லேப்டாப், தீப்பெட்டி, எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்கள் மற்றும் எலக்ட்ரானிக் சாதனங்களை எடுத்துச் செல்ல வேட்பாளர்களுக்கும், முகவர்களுக்கும் கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகவர்களுக்கான விதிமுறைகள்: ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு தலா 14 மேஜைகள் வீதம் வாக்கு எண்ணிக்கை நடைபெறும். ஒவ்வொரு மேஜைக்கும் வேட்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முகவர் மட்டுமே அனுமதிக்கப்படுவார். முகவர்கள் காலை 6:00 மணிக்கே மையத்திற்கு வருகை தந்து தங்களின் வருகையைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

போக்குவரத்து மற்றும் அடிப்படை வசதிகள்: கல்லூரியைச் சுற்றியுள்ள 100 மீட்டர் பகுதி நடைபாதை மண்டலமாக (Pedestrian Zone) மாற்றப்பட்டுள்ளது. இப்பகுதிக்குள் வாகனங்கள் நுழைய அனுமதி இல்லை. கோடை வெப்பத்தைக் கருத்தில் கொண்டு, முகவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு போதிய குடிநீர், நிழற்கூடங்கள், கழிவறை வசதிகள் மற்றும் அவசர கால மருத்துவக் குழுக்கள் ஆம்புலன்ஸ் வசதியுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

தகவல் பரிமாற்றம்: ஊடகவியலாளர்கள் தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள தனி ஊடக மையம் (Media Centre) அமைக்கப்பட்டுள்ளது. மேலும், செய்தியாளர்கள் தடையின்றிப் பணியாற்றத் தேவையான வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்திலும் முடிவுகள் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படும். பின்னர், மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது;

ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியாக வாக்குகள் எண்ணப்படும் அறைகள் (Counting Halls) தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், வாக்கு எண்ணிக்கை பணியை எவ்வித புகார்களுக்கும் இடமின்றி, அமைதியான முறையிலும் ஜனநாயக ரீதியிலும் நடத்தி முடிக்க அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் .என்.ஓ.சுகபுத்ரா, கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில்மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ஆனந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) .சோமசுந்தர சீனிவாசன், தேர்தல் வட்டாட்சியர் .சீனிவாசன், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## திருவண்ணாமலை மாவட்டத்தில்

# சட்டமன்ற தொகுதி வாரியாக வாக்கு எண்ணுகை அலுவலர்கள் நியமனத்திற்கான இரண்டாம்கட்ட சமவாய்ப்புக்குட்படுத்துதல் பணி

### கலெக்டர் தலைமையில் நடைபெற்றது




திருவண்ணாமலை, மே. 03–

திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், தலைமையில் வாக்கு எண்ணிக்கை பார்வையாளர்கள்தினேஷ் குமார் ஜாங்கிட், எஸ்.சி.எஸ்.(செங்கம்), தபிராம் மாஜி, எஸ்.சி.எஸ்.(போளூர்) ஆகியோர் முன்னிலையில் (02.05.2026) அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்குகள் எண்ணும் பணிக்காக சட்டமன்ற தொகுதிவாரியாக வாக்கு எண்ணுகை அலுவலர்கள் நியமனத்திற்கான இரண்டாம் கட்ட சமவாய்ப்புக் குட்படுத்துதல் பணி நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்கள் 2026 வாக்குப்பதிவு நிறைவடைந்ததையொட்டி இந்தியத் தேர்தல் ஆணைய உத்தரவின்படி அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கும் வருகிற 04.05.2026 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

மேற்படி, வாக்கு எண்ணுகை பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கைஅலுவலர்களுக்கு சட்டமன்ற தொகுதிவாரியாக பணி ஒதுக்கீடு செய்யும்பொருட்டு 184 வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள், 224 வாக்கு எண்ணிக்கை உதவியாளர்கள் மற்றும் 188 நுண் பார்வையாளர்களுக்கு கணினி மூலம் இரண்டாம்கட்ட சமவாய்ப்புக்குட்படுத்துதல் ( Second Randomization) பணிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராமபிரதீபன், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) அன்பழகன், சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சொத்து தகராறு:

# காவல் நிலையத்தில் தீக்குளிக்க முயற்சி; வழக்கறிஞர் கைது

தூத்துக்குடி, ஏப். 03–

தூத்துக்குடி மாவட்டம், குரும்பூரில் சொத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும், அதுவரை உடலை அடக்கம் செய்யவிடமாட்டேன் என்று கூறி வழக்கறிஞர் ஒருவர் தகராறில் ஈடுபட்டார்.

தூத்துக்குடி மாவட்டம், குரும்பூர் அருகே அங்கமங்கலம் கோட்டார்விளையைச்சேர்ந்தவர் பெரியசாமி (வயது 91). இவருக்கு அம்பிகா, உமாபதி, இந்துமதி ஆகிய 3 மகள்கள் உள்ளனர். கடந்த மார்ச் மாதம் பெரியசாமியின் மனைவி காலமான நிலையில், அவர் ராதாபுரத்தில் உள்ள தனது 3வது மகள் இந்துமதி வீட்டில் வசித்து வந்தார். கடந்த ஏப்ரல் 29ம் தேதி உடல்நலக்குறைவால் பெரியசாமி காலமானார்.

பெரியசாமியின் உடல் அடக்கத்திற்காக கடந்த வியாழக்கிழமை அங்கமங்கலத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அப்போது அவரது 2வது மகளான உமாபதியின் கணவர், வழக்கறிஞர் டேவிட் கணேசன்(45), சொத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்றும், அதுவரை உடலை அடக்கம் செய்யவிடமாட்டேன் என்றும் கூறி தகராறில் ஈடுபட்டார். ஊர்மக்கள் சமாதானம் செய்தும் அவர் உடன்படாததால், உறவினர்கள் உடலை ஒப்படைக்க மறுத்தனர்.

இதுகுறித்து புகார் அளிக்க நேற்று குரும்பூர் காவல் நிலையத்திற்கு சென்ற டேவிட்கணேசன், திடீரென தான் மறைத்து வைத்திருந்த மண்ணெண்ணெய்யைத் தன் மீதும், தனது மகன் அஸ்வந்த்(17) மீதும் ஊற்றித் தற்கொலைக்கு முயன்றார். அப்போது அங்கிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் இளங்கோ மற்றும் போலீசார் உடனடியாக அவர்கள் மீது தண்ணீரை ஊற்றி 2 பேரையும் மீட்டனர். தற்கொலைக்கு முயன்ற வழக்கறிஞர் டேவிட்கணேசன் மற்றும் அவரது மகன் அஸ்வந்த் ஆகிய 2 பேர் மீதும் குரும்பூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து, அவர்களை கைது செய்தனர். சொத்து தகராறுக்காகத் தந்தையின் உடலை வைத்து மருமகனே காவல் நிலையத்தில் தற்கொலைக்கு முயன்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# விருத்தாசலம் டாக்டர் இ.கே.சுரேஷ் கல்விக் குழுமத்தின் 17ஆம் ஆண்டு துவக்க விழா




விருத்தாச்சலம், மே .03

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில் அமைந்துள்ள இ.கே.சுரேஷ் கல்விக் குழுமத்தின் சிபிஎஸ் பள்ளி, மெட்ரிக் பள்ளி, கலை அறிவியல் கல்லூரி மற்றும் துணை சுகாதார படிப்புகள் கல்லூரியில் 17 ஆம் ஆண்டு விழா நடைபெற்றது.

இதனை முன்னிட்டு டாக்டர் இ.கே. சுரேஷ் கல்வியியல் கல்லூரி கலையரங்கில் கல்விக் குழும தலைவர் டாக்டர் இ.கே. சுரேஷ், இந்துமதி சுரேஷ் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தனர்.

மேலும் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பட்டிமன்ற பேச்சாளர் வழக்கறிஞர் அருண் மற்றும் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்லூரி பேராசிரியை மணிமேகலை ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பல நல்ல கருத்துக்களை வழங்கினார்கள். கல்விக் குழுமத்தின் முன்னாள் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் பூங்கோதை, இந்துமதிசுரேஷ், அலுவலர் அருண் குமார் மற்றும் மேலாளர் கவி பாண்டியன், முதல்வர் சின்னப்பொண்ணு ஏசுதாஸ், துணை சுகாதாரப் படிப்பு கல்லூரி முதல்வர் ஞானசுந்தரி மற்றும் பேராசிரிய பெருமக்கள் பள்ளி ஆசிரிய பெருமக்கள், மாணவ மாணவிகள் பெரும் திரளாக கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து மேலும் சிறப்பாக பயின்ற மாணவி, மாணவர்களுக்குபாராட்டு தெரிவித்து நினைவு பரிசுகளை வழங்கினார்கள்.

# HFCL: வலுவான வருவாய் வளர்ச்சியுடன் வரலாற்று சாதனை நிதி செயல்திறன் பதிவு

சென்னை:

HFCL Limited நிறுவனம் FY26 நிதியாண்டிலும் Q4 காலாண்டில் தனது இதுவரை இல்லாத மிகச் சிறந்த செயல்திறனை பதிவு செய்துள்ளது. நிறுவனம் FY25ஐ ஒப்பிடுகையில் 21%க்கும் மேல் வருவாய் வளர்ச்சியையும், முக்கியமான அளவில் லாப விகிதம் விரிவாக்கத்தையும் பெற்றுள்ளது. மேலும், ₹21,000 கோடியை கடந்த மிக உயர்ந்த ஆர்டர் புத்தகத்தையும் (order book) பதிவு செய்துள்ளது.

காலாண்டு அடிப்படையில், நிறுவனம் ₹1511.24 கோடி வருவாய், ₹312.41 கோடி EBIDTA, ₹216.38 கோடிPBTமற்றும்₹177.58 கோடி PAT என வலுவான நிதி முடிவுகளை அறிவித்துள்ளது.

இந்த வளர்ச்சி, தயாரிப்பு மையப்படுத்தப்பட்ட வணிகம், ஏற்றுமதி விரிவாக்கம் மற்றும் உயர்தர ஆப்டிகல் ஃபைபர் கேபிள் தேவையின் அதிகரிப்பு ஆகியவற்றால் இயக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கருத்து தெரிவித்த Mahendra Nahata, “FY26 HFCL நிறுவனத்துக்கு ஒரு வரையறை மாற்றமான ஆண்டு.

வலுவான ஆர்டர் புத்தகம், உலகளாவிய விரிவாக்கம் மற்றும் பாதுகாப்புத் துறையில் வளர்ச்சி ஆகியவை நிறுவனம் புதிய வளர்ச்சி கட்டத்திற்கு கொண்டு செல்கின்றன,” என்று தெரிவித்துள்ளார்.

# உள்ளத்தை உலுக்கும் ‘கிருஷ்ணாவதாரம்’ திரைப்படத்தின் இசை ஆல்பம் வெளியாகியுள்ளது




சென்னை :

இறைவன் கிருஷ்ணரின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட புராண திரைப்படமான ‘கிருஷ்ணாவதாரம்’ மே 7, 2026 அன்று பிரம்மாண்டமாக வெளியாகிறது. மூன்று பகுதிகளைக் கொண்ட தொடரின் முதல் படமாக உருவாகியுள்ள இது, கண்ணைக் கவரும் டிரெய்லர் மற்றும் ‘பிரேம் கி லீலா’ பாடலின் மூலம் ஏற்கனவே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியாக, மொத்தம் ஒன்பது பாடல்களைக் கொண்ட இசை ஆல்பமும் வெளியாகியுள்ளது.

இர்ஷாத் காமில் எழுதிய வரிகளுக்கும், பிரசாத் எஸ் அமைத்த இசைக்கும் இணையாக, சோனு நிகம், சுனிதி சவுகான், ஷ்ரேயா கோஷால், நீதி மோகன், ஜாவேத் அலி உள்ளிட்ட முன்னணி பாடகர்கள் குரல் கொடுத்துள்ளனர். ‘ஷ்யாமல் சன்வாரே’, ‘கிருஷ்ணா கோவிந்தா’ போன்ற பாடல்கள் பக்தி, காதல் மற்றும் கொண்டாட்ட உணர்வுகளை அழகாக வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, சோனு நிகம் – நீதி மோகன் பாடிய ‘ஷ்யாமல் சன்வாரே’ பாடல் வீடியோ, கிருஷ்ணரின் லீலைகளை சித்தரித்து ரசிகர்களை கவர்கிறது. ஹார்டிக் கஜ்ஜர் இயக்கிய இப்படத்தை கிரியேட்டிவ்லேண்ட் ஸ்டூடியோஸ் என்டர்டெயின்மெண்ட் நிறுவனத்தின் சஜன் ராஜ் குருப், ஷோபா சாந்த் மற்றும்அதாஷ்ரிகதாமோஷன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் பூனம் ஷ்ரோஃப், பார்த்த் கஜ்ஜர் தயாரித்துள்ளனர். ஹிந்தி, தமிழ், தெலுங்கு மொழிகளில் உலகம் முழுவதும் வெளியாக உள்ள இந்த படம், அதன் வலுவான கலைஞர் அணியாலும் இசை ஆல்பத்தாலும் பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

# ஒன்பிளஸ் பேட் 4, ஸ்னாப்டிராகன்® 8 எலைட் ஜென் 5 உடன் அறிமுகமானது, பயணத்தின் போதே பிசிலெவல் செயல்திறனை வழங்குகிறது




சென்னை:

உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனம் ஒன்பிளஸ், தனது புதிய ஃபிளாக்ஷிப் டேப்லெட்டான ஒன்பிளஸ் பேட் 4ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. ஸ்னாப்டிராகன் 8 எலைட் ஜென் 5 செயலி, 33.53 செ.மீ 3.4K திரை, 13,380 எம்.ஏ.எச் பேட்டரி ஆகிய சக்திவாய்ந்த அம்சங்களுடன், இது எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய வடிவில் கணினி நிலை செயல்திறனை வழங்குகிறது. 144 ஹெர்ட்ஸ் திரை புதுப்பிப்பு விகிதம் மற்றும் எட்டு ஸ்பீக்கர் அமைப்பு, சிறந்த காட்சி மற்றும் ஒலி அனுபவத்தை அளிக்கின்றன. இந்த சாதனம் 12 ஜி.பி நினைவகம் மற்றும் 512 ஜி.பி சேமிப்பு வசதியுடன், அதிக வேகமும் துல்லியமும் கொண்ட செயல்பாட்டை வழங்குகிறது.

மேம்பட்ட குளிரூட்டும் அமைப்பு நீண்ட நேர பயன்பாட்டிலும் சூடு அதிகரிக்காமல் பாதுகாக்கிறது. 80 வாட் அதிவேக மின்சாரம் நிரப்பு வசதி மற்றும் நீண்டநேர பேட்டரி ஆயுள், வேலை மற்றும் பொழுதுபோக்கை இடையூறு இல்லாமல் அனுபவிக்க உதவுகிறது. மேலும், புத்திசாலித்தனமான செயற்கை நுண்ணறிவு வசதிகள்,

பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்ய உதவும் அம்சங்கள் மற்றும் மெட்டல் உடல் வடிவமைப்பு ஆகியவை, இதை தொழில் வல்லுநர்கள் மற்றும் படைப்பாளிகளுக்கான சிறந்த தேர்வாக மாற்றுகின்றன. ரூ.54,999 முதல் தொடங்கும் விலையில், மே 5 முதல் விற்பனைக்கு வரும் இந்த டேப்லெட், பலசலுகைகளுடன் ஆன்லைன் மற்றும் அங்காடிகளில் கிடைக்கும்.



தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக தேசிய தகவலியல் மைய கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் தலைமையில் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் வாக்கு எண்ணிக்கை மையத்தில் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்கள், வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்களுக்கு QR கோடுடன் கூடிய அடையாள அட்டை வழங்குவது தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நேற்று (02.05.2026) நடைபெற்றது.

### திண்டுக்கல் மாவட்டத்தில்

# அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகளை கலெக்டர் ஆய்வு



திண்டுக்கல், மே. 03–

திண்டுக்கல் முத்தனம்பட்டி அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள முன்னே ற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். 23.04.2026அன்று திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வாக்குப் பதிவு நடைபெற்றது. மேலும், முத்தனம்பட்டி அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை மையமான திண்டுக்கல் முத்தனம்பட்டி அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள வளாகம் முழுவதும் 165க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் மூலம் 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. வாக்கு எண்ணிக்கை மையத்தில் பாதுகாப்பு பணிகளில் தீயணைப்புத் துறையினர், துணை இராணுவ படையினர், சிறப்பு ஆயுதப்படை காவலர்கள், உள்ளூர் காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் சுழற்சி முறையில் தங்களது பாதுகாப்பு பணியினை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், கண்காணிப்பு கேமராக்கள் மூலம் வாக்கு எண்ணிக்கை மையத்தை கண்காணிப்பதற்கு 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டுப்பாட்டு அறையில் அரசு அலுவலர்கள் மற்றும் வேட்பாளரின் முகவர்கள் ஆகியோர்கள் சுழற்சி முறையில் பார்வையிடும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கட்டுபாட்டு அறையில் தினசரி செய்தி தாள்கள், புத்தகங்கள் மற்றும் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தி உள்ளார்கள்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

### குடியாத்தத்தில்

# குழந்தைகளுக்கான சதுரங்க போட்டி




வேலூர், மே. 03–

குடியாத்தம் தாலுகா சதுரங்ககழக சங்கம் மற்றும் ராய வேலூர் சதுரங்ககழக சங்கம் இணைந்து மாவட்ட அளவிலான முதன்முறையாக குழந்தைகளுக்கான சதுரங்க போட்டி திருவள்ளுவர் மேல் நிலைப் பள்ளியில் நடை பெற்றது .

இந்த போட்டியை பள்ளி தலைமை ஆசிரியர் பழனி தொடங்கி வைத்தார் 200க்கும்மேற்பட்டசிறுவர்கள் இதில் கலந்து கொண்ட னர் .

முதலாவது வெற்றி பெற்றவர்களுக்கு ஆயிரம் ரூபாயும் இரண்டாவது பரிசாக ரூபாய் 750 மற்றும் மூன்றாவது பரிசு 600 என பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் ராய வேலூர் சதுரங்க தலைவர் மனோகரன் செயலாளர் மணிகண்டசாமி மற்றும் குடியாத்தம் தலைவர் சுஜாதா மாலதி அமுதா திலகவதி வனிதா மணிமாறன் தினேஷ் குமார் உட்பட குழந்தைகளின் பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர் நடுவர்களாக பிரகாஷ் ராஜசங்கர் சுரேஷ் கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காதல் திருமணம் செய்த பட்டதாரி பெண் தற்கொலை

ஆத்தூர், மே. 03–

ஆத்தூர் அருகே தாண்டவராயபுரம் காமராஜர் நகரை சேர்ந்த சுப்பிரமணி மகள் சந்திரலேகா (வயது 29). இவர், எம்.எஸ்.சி., பி.எட். படித்து விட்டு கடந்த 2020ம் ஆண்டு ஆத்தூர் அருகே உள்ள கல்பகனூர் இளங்கோநகரை சேர்ந்த ராஜதுரை (31) என்பவரை காதல் திருமணம் செய்து கொண்டார்.

இதற்கிடையே சந்திரலேகா வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிகிறது. இதுகுறித்து ஆத்தூர் போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். சந்திரலேகாவுக்கு திருமணம் ஆகி 6 ஆண்டுகள் ஆவதால் உதவி கலெக்டர் தமிழ்மணி விசாரணை நடத்தி வருகிறார். சந்திரலேகா உடல் பிரேத பரிசோதனை செய்து குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே சந்திரலேகாவின் பெற்றோர் தரப்பில் ஆத்தூர் போலீசில் பரபரப்பு புகார் அளிக்கப்பட்டுள்ளது.

அதாவது, சந்திரலேகாவும், ராஜதுரையும் வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றும், காதலித்து திருமணம் செய்த போதிலும் திருமணத்தின் போது 8 பவுன் நகை, ரூ.2 லட்சம் சீர்வரிசையாக கொடுத்தோம். அவர்கள் பல்வேறு ஊர்களில் வீடு வாடகைஎடுத்துவசித்து வந்தனர்.

திருமணம் ஆன சில நாட்களில் ராஜதுரைக்கு ஏற்கனவே திருமணம் ஆகி மனைவி, குழந்தைகள் இருப்பதை அறிந்து அதிர்ச்சி அடைந்தோம். சந்திரலேகாவுக்கு 3 முறை கருக்கலைப்பு செய்துள்ளனர். சாதி ரீதியாகவும்அவளைகொடுமைப்படுத்தி உள்ளனர். வரதட்சணை கேட்டும் சித்ரவதை செய்துள்ளனர். எனவே எங்களது மகள் சாவுக்கு ராஜதுரை காரணம் என்றும், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த புகார் மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த சம்பவம் ஆத்தூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கழிப்பிடங்கள் பராமரிப்பு இன்றி மிகுந்த தூய்மையற்ற நிலையில் காணப்படுகின்றன. பல இடங்களில் கழிவுகள் அகற்றப்படாமல் குவிந்து கிடப்பதுடன், கடுமையான துர்நாற்றம் வீசுவதால் நோயாளிகள் மற்றும் உறவினர்கள் கடும் அவதிக்கு உள்ளாகின்றனர். சிகிச்சைக்காக வரும் பொதுமக்கள் கூட இதனால் கூடுதல் நோய் தொற்று அபாயத்திற்கு ஆளாகும் நிலை உருவாகியுள்ளது. மருத்துவமனை போன்ற முக்கிய இடத்தில் அடிப்படை சுகாதார வசதிகள் இவ்வாறு புறக்கணிக்கப்படுவது பெரும் கேள்விக்குறியாக உள்ளது. துப்புரவு பணியாளர்கள் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் தங்கள் பொறுப்புகளை முறையாக நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட மருத்துவமனை நிர்வாகம் உடனடியாக ஆய்வு மேற்கொண்டு, துப்புரவு பணிகளை ஒழுங்குபடுத்தி, பொறுப்பில்லாமல் செயல்படும் பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து, கழிப்பிடங்களை சீரமைத்து சுகாதாரமான சூழலை உறுதி செய்ய வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.



திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே கொக்கலாடி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயத்தின் சித்திரை தீமிதி மற்றும் தெப்பத்திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. ஏப்ரல் 14 அன்று காப்பு கட்டுதல் இருந்து துவங்கி தினந்தோறும் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகளும் சுவாமி புறப்பாடும் நடைபெற்றது . பக்தர்கள் காவடி எடுத்து வந்து ஆலயத்தின் எதிரே அமைக்கப்பட்டுள்ள தீக்குண்டத்தில் இறங்கி தங்கள் வேண்டுதலை நிறைவேற்றினர். காலை முதல் அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகளும் மாவிளக்கு போடுதல் என சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது. வருகின்ற மே 3ஆம் தேதி தெப்ப திருவிழாவும் நடைபெறுகின்றது இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

### கரூரில்

# காருக்குள் 3 வயது சிறுவன் மூச்சு திணறி பலி



கரூர், மே. 03–

கரூர் மாவட்டம் கழுகூர் பகுதியில் வீட்டில் நின்ற காருக்குள் சிக்கிய 3 வயது சிறுவன் கார் கதவு லாக் ஆகியதால் வெளியே வர முடியாமல் மயங்கி விழுந்தான்.

கரூர்மாவட்டம்தோகைமலை அருகே உள்ள கழுகூர் ஈஸ்வரன் கோவில் தெருவை சேர்ந்தவர் ஆண்டிவேல் (வயது 34). இவர் கொத்தனார் வேலை செய்து வருகிறார். இவருக்கு 2 மகன்கள் உள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை வீட்டில் 2வது மகன் சஞ்சீவ்(3) விளையாடி கொண்டிருந்தான்.


அப்போது வீட்டில் நின்ற காருக்குள் சென்று, காரின் கதவை சாத்தியதாக தெரிகிறது. அப்போது கார் கதவு 'லாக்' ஆகியதால் சிறுவன் வெளியே வரமுடியாமல் மயங்கி விழுந்தான். இந்த நிலையில் சஞ்சீவை காணவில்லை என அவனது பெற்றோர் பல்வேறு இடங்களில் அவனை தேடி பார்த்தனர். ஆனால் அவன் எங்கும் கிடைக்கவில்லை.

அதனை தொடர்ந்து சந்தேகத்தின் பேரில் அவனது பெற்றோர் வீட்டில் நிறுத்தி இருந்த காரின் கதவை திறந்து பார்த்தனர். அங்கு சஞ்சீவ் மயங்கிய நிலையில் காரின் இருக்கையில் கிடந்தான். இதனைக்கண்டு அதிர்ச்சி அடைந்த அவனது பெற்றோர், அவனை மீட்டு சிகிச்சைக்காக தோகைமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் சஞ்சீவ் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். அப்போது அவனது உடலை கண்டு பெற்றோர் மற்றும் உறவினர்கள் கதறி அழுதது கண்போரை கண்கலங்க வைத்தது.

இதுகுறித்து தகவலறிந்த தோகைமலை போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் பாலசுப்பிரமணியம், சஞ்சீவ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக குளித்தலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். 3 வயது சிறுவன் காருக்குள் மூச்சு திணறி இறந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

### வால்பாறையில்

# தேயிலை தோட்டத்தில் உலா வந்த சிறுத்தைகள்



வால்பாறை, மே. 03–

சுற்றுலா பயணிகள் ஆபத்தை உணராமல் சாலையில் வாகனங்களை தாறுமாறாக நிறுத்திவிட்டு தேயிலை தோட்டத்தில் உலா வந்த சிறுத்தைகளை கண்டு ரசித்தனர்.

கோவை மாவட்டம் வால்பாறையில் நகர்பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு எஸ்டேட் பகுதிகளில் இரவு, பகலாக சிறுத்தை நடமாட்டம் இருந்து வருகிறது. இந்தநிலையில் வால்பாறை பொள்ளாச்சி சாலை காமராஜர் நகர் பகுதி அருகில் உள்ள சவரங்காடு எஸ்டேட் தேயிலை தோட்ட பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் 2 சிறுத்தைகள் உலா வந்தன. இதனை அந்த வழியாக சாலையில் வாகனங்களில் சென்ற சுற்றுலா பயணிகள் பார்த்தனர்.

தொடர்ந்து, சுற்றுலா பயணிகள் ஆபத்தை உணராமல் சாலையில் வாகனங்களை தாறுமாறாக நிறுத்திவிட்டு தேயிலை தோட்டத்தில் உலா வந்த சிறுத்தைகளை கண்டு ரசித்தனர். இதையடுத்து சிறிதுநேரத்தில் அந்த வழியாக வந்த அனைத்து சுற்றுலா பயணிகள், பொது மக்களும் சிறுத்தையை காண குவிந்தனர். அவர்கள் தங்களது செல்போனில் சிறுத்தையை புகைப்படம் எடுத்தனர். அப்போது ஒரு சிறுத்தை அங்கிருந்து ஓடிய நிலையில், மற்றொரு சிறுத்தை தேயிலை தோட்ட பகுதியில் இருந்த பாறை மீது ஏறி நடந்து சென்றது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. மேலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவல் அறிந்து வனத்துறையினர் விரைந்து வந்து சுற்றுலா பயணிகளை எச்சரித்து அனுப்பி வைத்து போக்குவரத்தை சரி செய்தனர். மேலும் சிறுத்தைகளின் நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

### நெல்லையில்

# கஞ்சா விற்ற வாலிபர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது

திருநெல்வேலி, மே. 03–

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், பாணான்குளம் பகுதியை சேர்ந்த முத்துராஜ் மகன் வானுமாமலை (வயது 27), சட்ட விரோதமாக கஞ்சா விற்பனை செய்ய வைத்திருந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

மூன்றடைப்பு போலீஸ் இன்ஸ்பெக்டர் சபிதா, மேற்சொன்ன நபர் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன் பேரில், திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின் பேரில், வானுமாமலை தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் நேற்று அடைக்கப்பட்டார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மக்களின் பாதுகாப்பை கருதி, சட்ட ஒழுங்கை பாதுகாக்கவும், குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், அதனை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த, இந்த ஆண்டில் மட்டும் இது வரை 47 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

# குடியிருப்பு பகுதியில் கொட்டப்படும் குப்பைகள் நோய் தொற்று பரவும் அபாயம்

## நடவடிக்கை எடுக்குமா ஓசூர் மாநகராட்சி



கிருஷ்ணகிரி, மே. 03–

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அடுத்த ஒண்ணல்வாடி பஞ்சாயத்து குடியிருப்பு பகுதியில் சாலை ஓரங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் வெளியூரிலிருந்து கொண்டு வந்து கொட்டப்படும் குப்பை யால் நோய் தொற்று ஏற்படும் அபாயம் நிலவுகிறது.

காரப்பள்ளி ஒன்னல்வாடி சாலையோர ங்களில் பல மாதங்களாக சாலையின் இரு புறங்களிலும் டன் கணக்கில் குப்பைகள் தேங்கி நிற்கிறது.

இதனால் குடியிருப்பு வாசிகளுக்கு நோய் தொற்றுஅபாயம்ஏற்பட வாய்ப்புள்ளதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு இக்குப்பைகளால் மாலை நேரங்களில் அதிக அளவு கொசு தொல்லைகள் இருப்பதாகவும் இதனால் டெங்கு மலேரியா போன்ற தொற்றுநோய்கள் ஏற்பட அதிக அளவில் வாய்ப்பு ள்ளதாக குடியிருப்பு வாசிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

மாநகராட்சி நிர்வாகம் இதனை கருத்தில் கொண்டு விரைவாக நடவடிக்கை எடுக்க பொதுமக்கள், குடியிருப்பு வாசிகள், வாகன ஓட்டிகள், சமூக ஆர்வலர்கள், கோரிக்கை வைத்துள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CALL: 044-22772060,9443699066